## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

### 1. முன்னுரை

தமிழ்நாடு அரசு 27.02.1982 அன்று பிரிவு 4, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974–ன் படி தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியத்தை அமைத்தது. பின்பு 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. நாட்டில் உள்ள மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தலை சிறந்த வாரியமாக திகழ்கின்றது. 17 பணியாளர்களுடன் துவக்கப்பட்ட வாரியம், தற்போது 597 பணியாளர்களுடன் அனைத்து மாவட்டத்திலும் சொந்தக்கட்டிடத்தில் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் நவீன உபகரணங்கள் கொண்ட ஆய்வகங்களுடன் சிறப்பாக செயலாற்றி வருகின்றது. வாரியம், நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981, சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 மற்றும் இச்சட்டங்களின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட விதிகளை செயல்படுத்தி வருகின்றது.

### 1.1 வாரியத்தின் கடமை

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986–ன் கீழ் வெளியிடப்பட்ட பல்வேறு சட்ட விதிகளை அமல்படுத்துவதன் மூலம் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளை

மேற்கொண்டு மாநிலத்தின் சுற்றுச்சூழலை பாதுகாப்பது வாரியத்தின் கடமை ஆகும். மாநிலத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வண்ணம், வாரியம் தொழிற்சாலைகளை ஆய்வு செய்தல், மாதிரிகள் சேகரித்தல், புள்ளி விபரங்கள் சேகரித்தல், தொழில்நுட்ப அறிவியல் விளக்கங்களை அளித்தல், தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஆலோசித்தல் மற்றும் மாநில அரசுடன் ஒருங்கிணைந்து சுற்றுச்சூழல் விதிகளை செயல்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் மூலம் சிறப்பாக செயலாற்றி வருகின்றது. தற்போது வாரியம் கீழ்க்கண்ட சட்டங்கள் மற்றும் விதிகளை செயல்படுத்தி வருகின்றது.

**சட்டங்கள்**

- நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974
- காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981
- சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986

**விதிகள்**

- தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983

- தமிழ்நாடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983
- சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள், 1986
- தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், 1989
- பறக்கும் சாம்பல் பயன்படுத்துதல் அறிவிக்கை, 1999
- மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2001
- சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006
- திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016
- பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016
- கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள், 2016
- மின்னணு கழிவு மேலாண்மை விதிகள், 2016
- மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள், 2016

- தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016

## 2. பணிகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட சட்ட பூர்வ அமைப்பாகும். இதன் முக்கிய பணிகள், மாநிலத்தில் உள்ள நீர்நிலைகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மாசடைதலை தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் மூலம் அவற்றின் தூய்மையை பாதுகாத்தல், மற்றும் மாநிலத்தின் காற்று மாசடைதலை தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் மூலம் காற்றின் தரத்தை மேம்படுத்தி மாநிலத்தின் சுற்றுச்சூழலை பாதுகாத்தல் ஆகும்.

வாரிய தலைமை அலுவலகத்தில், திட்டமிடல் மற்றும் மேம்பாடு, தொழில்நுட்பம், நிர்வாகம், நிதி மற்றும் கணக்கு, சட்டம், கட்டுமானம், ஆய்வகம், கணினி, புகார் மற்றும் இணையவழி தொழிற்சாலைகள் கண்காணிப்பு ஆகிய முக்கிய பிரிவுகள் செயல்படுகின்றன. மாவட்ட அலுவலகங்களின் மூலம் தொழிற்சாலைகள் ஆய்வு செய்தல், மாதிரி சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 2.1 நீர் மற்றும் காற்று சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட செயல்பாடுகள்

பிரிவு 17, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் பிரிவு 17, காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981–ன் கீழ் வரையறுக்கப்பட்டபடி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முக்கியப் பணிகள் பின்வருமாறு :

- ஓடைகள், கிணறுகள் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் பற்றிய விரிவான திட்டம் தீட்டுதல் மற்றும் செயல்படுத்துதல்.

- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் குறித்து மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்புடைய தகவல்களை சேகரித்தல் மற்றும் வெளியிடுதல்.

- வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனை ஆய்வு

செய்தல் மற்றும் திட்டங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான விவரங்கள், கழிவுநீர் வெளியேறுவதற்கான வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்தல்.

- காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- காற்று மாசு கட்டுப்பாடு பகுதியில் காற்றின் தன்மையை அளவீடு செய்ய குறிப்பிட்ட இடைவெளிகளில் ஆய்வு செய்தல் மற்றும் காற்று மாசுபடுவதைக் கட்டுப்படுத்துதல், தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர் ஆகியவற்றின் தர அளவீடுகளை வரையறுத்தல், மாற்றம் செய்தல் மற்றும் கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதால் நீர்நிலைகளில் ஏற்படும் தர மாற்றங்களை கணக்கிடுதல் மற்றும் மாநிலத்தின் நீர்நிலைகளை வகைப்படுத்துதல்.

- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கலந்தாராய்ந்து தொழிற்சாலைகளிலிருந்து வளி மண்டலத்தில் வெளியேற்றப்படும் காற்று மாசு அல்லது தானியங்கி ஊர்திகளிலிருந்து வெளியேற்றப்படும் மாசு அல்லது பிற வகை காற்று மாசு காரணிகளுக்கு தரநிர்ணயம் செய்தல்.

- வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரை சிறந்த முறையில் பொருளாதார ரீதியாக உகந்த வழியில் சுத்திகரிப்பு செய்வதற்கான தொழில்நுட்பத்தை உருவாக்குதல்.

- வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலை கழிவுநீர் விவசாயத்திற்கு பயன்படுத்தக் கூடியதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.

- வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர் நிலத்தில் வெளியேற்றுவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.

- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து, நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்க,

கட்டுப்படுத்த மற்றும் குறைப்பது சம்பந்தமான திட்டங்களில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் விழிப்புணர்வு கல்வி நிகழ்ச்சிகளை நடத்துதல்.

- நீர் மாசுபடுதலை தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் குறித்து ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல், பங்கேற்றல் மற்றும் ஊக்கமளித்தல்.

- தொழிற்சாலை அமையும் இடத்தில் நீர்நிலைகள் அல்லது காற்று மாசு ஏற்படக்கூடுமாயின் அது பற்றிய அறிவுரை அறிக்கையை மாநில அரசுக்கு அளித்தல்.

- வாரிய செயல்பாடுகளை சீரியமுறையில் மேற்கொள்வதற்கும் மற்றும் நீர்நிலைகளில் நீர் மாதிரிகள், வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர், வாயுக்கழிவு மாதிரிகள் சேகரிப்பு செய்து பகுப்பாய்வு செய்வதற்கு ஆய்வகம் அமைத்தல் அல்லது ஆய்வகங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்.

- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில அரசு அவ்வப்போது குறிப்பிடும் பிற பணிகளையும் நிறைவேற்றுதல்.

**3. நிறுவன அமைப்பு**

சட்டப் பிரிவுகளின்படி மாநில அரசால் ஏற்படுத்தப்படும் மாநில மாசு கட்டுப்பாடு வாரியம், தலைவர், உறுப்பினர் செயலர் மற்றும் அரசால் நியமிக்கப்படும் 15 உறுப்பினர்களைக் கொண்டதாகும். அரசால் நியமிக்கப்படும் 15 உறுப்பினர்களில் 5 நபர்கள் மாநில அரசு துறைகளிலிருந்தும், 5 நபர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகளும், 3 நபர்கள் விவசாயம், மீன்வளம், தொழில் போன்றனவற்றில் ஈடுபாடு உடைய அரசு சாரா உறுப்பினர்கள் மற்றும் 2 நபர்கள் அரசு நிர்வகிக்கும் தொழிற்சாலைகள் அல்லது தொழிற்கழகங்களை சார்ந்தவர்களும் நியமிக்கப்படுகின்றனர்.

வாரியம், மாநில அளவில் சென்னையில் தலைமை அலுவலகத்தையும், மண்டல அளவில் 7 மண்டல அலுவலகங்களையும், மாவட்ட அளவில் 38 மாவட்ட அலுவலகங்களையும் கொண்டு மூன்று நிலை அமைப்புடன் மார்ச் 31, 2018 தேதியில் மொத்தம் 597 பணியாளர்களுடன்

இயங்கி வருகின்றது. அதன்படி இணை தலைமை சுற்றுச் சூழல் பொறியாளர் தலைமையில் ஏழு மண்டல அலுவலகங்கள் சென்னை, வேலூர், திருச்சி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலியிலும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் 38 மாவட்ட அலுவலகங்களும், ஈரோடு மற்றும் திருப்பூரின் முக்கியத்துவத்தைக் கருதி சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இரண்டு பறக்கும் படைகளும் உள்ளன. மேலும் வாரியத்திற்கு சொந்தமாக 16 ஆய்வகங்கள் இயக்கத்தில் உள்ளன. இதில் 5 ஆய்வகங்கள் தேசீய அங்கீகாரம் (NABL) பெற்றவை ஆகும்.

## 4 இசைவாணை மேலாண்மை

### 4.1 தொழிற்சாலை வகைப்படுத்துதல்

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981–ன் கீழ் தொழிற்நிறுவனங்கள், தொழிற்சாலையை நிறுவுவதற்கு முன்பும் மற்றும் உற்பத்தியை துவங்குவதற்கு முன்பும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் இசைவாணை பெற வேண்டும். இசைவாணை கோரும் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களும் அவற்றின் மொத்த நிலையான சொத்தின்

அடிப்படையில் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய வகை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி தொழில் நிறுவனத்தின் மொத்த நிலையான சொத்து மதிப்பு ரூபாய் 5 கோடி வரை சிறியது, ரூபாய் 5 கோடி முதல் ரூபாய் 10 கோடி வரை நடுத்தரம் மற்றும் ரூபாய் 10 கோடிக்கு மேல் பெரியது என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தொழிற்சாலைகளின் மாசு குறியீட்டின் அடிப்படையிலும் சிகப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. கால தாமதத்தை தவிர்க்கும் வகையில் தொழிற்சாலைகளுக்கு நிறுவுதல், இயக்குதல் மற்றும் புதுப்பித்தல் இசைவாணை வழங்குவதற்கான அதிகாரம் மண்டல மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் மாசு கட்டுப்பாடு சாதனங்களை சரிவர இயக்குகின்றனவா எனவும், இசைவாணையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்றனவா எனவும் மாவட்ட பொறியாளர்கள் மூலம் ஆய்வு செய்து கண்காணிக்கப்படுகின்றன.

## 4.2 இசைவாணை கால அளவு

தொழிற்சாலைகள் இசைவாணை பெறுதலை எளிதாக்கும் வகையில், இசைவாணை செல்லுபடியாகும் கால அளவினை வாரியம் நீட்டிப்பு செய்துள்ளது. அதன்படி சுற்றுச்சூழல்
அனுமதி பெறும் தொழிற்சாலைகளுக்கு, நிறுவுவதற்கான இசைவாணை (Consent to Establish) 7 வருடத்திற்கும் மற்ற தொழிற்சாலைகளுக்கு 5 வருடத்திற்கும் செல்லுபடியாகும் வகையில் இசைவாணை வழங்கப்படுகிறது. இத்தொழிற்சாலைகள் உற்பத்தியை துவங்குவதற்கான இசைவாணை(Consent to Operate) சிகப்பு வகை தொழிற்சாலைகளுக்கு 5 வருடம், ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளுக்கு 10 வருடம் மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு 14 வருடம் செல்லுபடியாகும் வகையில் செலுத்தப்படும் இசைவாணை கட்டணத்திற்கு ஏற்ப இசைவாணை வழங்கப்படுகிறது. வெள்ளை வகை தொழிற்சாலைகள் வாரியத்தின் இசைவாணை பெறவேண்டிய அவசியம் இல்லை, உற்பத்தி துவங்குவது குறித்து வாரியத்திற்கு தெரிவிப்பது போதுமானதாகும். மேலும் இசைவாணை புதுப்பித்தல் செய்வதில் சிறிய சிகப்பு வகை

மற்றும் அனைத்து ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு ‘ஆட்டோ ரெனிவல்’ முறையை வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி தொழிற்சாலைகள் ஆய்வு செய்யப்படாமல் தொழிற்சாலை அளிக்கும் உத்தரவாதத்தின் அடிப்படையில் இசைவாணை புதுப்பிக்கப்படுகிறது. அனைத்து தொழிற்சாலைகளும் கள அலுவலர்கள் மூலம் ஆய்வு செய்து கண்காணிக்கப்படுகின்றன.

## 4.3 இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை (OCMMS)

அரசின் மின் ஆளுமை கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இசைவாணை மேலாண்மையில் மின் ஆளுமையை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதன்படி இசைவாணை வழங்குவதில் வெளிப்படை தன்மை மற்றும் உரிய காலத்தில் வழங்குவதற்காக தொழில் முனைவோர், வாரிய இசைவாணை விண்ணப்பங்களை சுலபமாக இணையதளத்தின் மூலம் சமர்ப்பிக்கும் பொருட்டு, வாரியம் இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமையை ஜனவரி **2015–ல்** ஏற்படுத்தியுள்ளது.

இவ்வசதியினைப் பயன்படுத்தி தொழில் முனைவோர் தொழிற்சாலை நிறுவுவதற்கான இசைவாணை, இயக்குவதற்கான இசைவாணை, இசைவாணையினை புதுப்பித்தல் மற்றும் ஆட்டோ ரெனிவல் முறையில் நிறுவுவதற்கான/இயக்குவதற்கான இசைவாணை புதுப்பித்தல் போன்றவற்றிக்கான விண்ணப்பங்களை இணையவழி மூலம் சமர்ப்பிக்கலாம். மேலும், சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் நிலையையும் அறிந்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இணையவழி மூலம் இசைவாணை வழங்கப்படுகிறது. ஏப்ரல் 1, 2017 முதல் மார்ச் 31, 2018 வரை 1094 தொழிற்சாலைகளுக்கு நிறுவுவதற்கான இசைவாணையும், 4441 தொழிற்சாலைகளுக்கு இயக்குவதற்கான இசைவாணையும் வழங்கப்பட்டுள்ளன.

## 5. பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தொழிற்சாலைகள் மற்றும் குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாமல் அதனை சேகரிப்பு செய்து ஓர் இடத்திற்கு எடுத்துச் சென்று சுத்திகரிப்பு செய்யும், பொது சுத்திகரிப்பு நிலைய தொழில் நுட்ப

கருத்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். அதன்படி நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு சிறு முதலீடு தொழிற்சாலைகளின் பங்களிப்பினை கருதியும் மற்றும் அவர்களுக்கு ஏற்படும் சிரமத்தை கருத்தில் கொண்டும், மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகம், சிறு தொழிற்சாலைகளுக்கு புதுமையான தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவி செய்யும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டம், தொகுப்பாக அமைந்துள்ள சிறு தொழிற்சாலைகள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கும், நிதி உதவி பெறுவதற்கும் வழிவகை செய்கின்றது. தற்போதைய நடைமுறைப்படி மத்திய அரசின் மானியமாக மொத்த திட்டசெலவில் 50 விழுக்காடும், மாநில அரசின் மானியமாக மொத்த திட்ட செலவில் 25 விழுக்காடும், தொழில் முனைவோரின் பங்களிப்பாக 25 விழுக்காடும் வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. தொழில் முனைவோரின் பங்களிப்பில் குறைந்த பட்சம் 40 விழுக்காடு சொந்த நிதியிலும் மீதம் உள்ள 60 விழுக்காடு வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்து கடன் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க பெரும்பங்காற்றி வருகிறது. சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திட தொழில்நுட்ப கூர்ந்தாய்வினை வாரியம் வழங்கி வருகிறது. தற்போது 33 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 19 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் துணி சலவை மற்றும் சாயமிடும் தொழிற்சாலைக்கானதாகும். இவற்றில் 468 தொழிற்சாலைகள் உறுப்பினர்களாக உள்ளன. இதன் மூலம் நாளொன்றுக்கு 102 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. 13 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் தோல் தொழிற்சாலைகளுக்கானதாகும். இவற்றில் 678 தொழிற்சாலைகள் உறுப்பினர்களாக உள்ளன. இவற்றில் நாளொன்றுக்கு 28.741 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் கொடைக்கானலில் அமைந்துள்ள ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதிகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரை சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உயர்நீதி மன்ற உத்தரவின்படி சாயத் தொழிற்சாலைகளின் 19 பொது சுத்திகரிப்பு நிலையங்களில், பூஜ்ஜிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர்

மறுசுழற்சி செய்யப்படுகிறது. அது போன்று, தோல் தொழிற்சாலைகளின் 11 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், பூஜ்ஜிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மறுசுழற்சி செய்யப்படுகிறது. மீதம் உள்ள 2 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை, சுத்திகரிக்கப்பட்ட வடிகால் கழிவுநீருடன் கலந்து வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவினை எட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றன.

## 6. இணையவழி தொடர் காற்று மற்றும் கழிவு நீர் கண்காணிப்பு அமைப்பு

தேசிய சுற்றுச்சூழல் கொள்கை 2006–ல் சுற்றுச்சூழல் தரத்தை கண்காணிப்பதற்காக உள்கட்டமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தவும், உண்மையான கண்காணிப்பு புள்ளி விவரங்களை இணையதளத்தில் கிடைக்கவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி வாரியம், மாசுகளை தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் நீக்குவதற்காக தொழிற்சாலைகளை கண்காணித்து உடனுக்குடன் புள்ளி விவரங்களை தெரிந்துகொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தொழிற்சாலைகள் தாங்கள் வெளியேற்றும் கழிவுநீர் மற்றும் புகையின் தரம் நிர்ணயிக்கப்பட்ட தர

அளவிற்கு உட்பட்டு உள்ளதா என்பதை சுய ஒழுங்குடன் கண்காணிப்பு செய்யும் வகையில் இணையவழி தொடர் கண்காணிப்பு கருவிகள் பொருத்தப்பட்டு, மைய சர்வருடன் (Server) இணைக்கப்பட்டுள்ளது.

## 6.1 காற்று தர கண்காணிப்பு மையம்

தொழிற்சாலைகளை 24 x 7 மணி நேரமும் தொடர்ந்து கண்காணிக்க ஏதுவாக, வாரிய தலைமை அலுவலகத்தில் காற்று தர கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதிக மாசுபடுத்தும் 17 வகையான தொழிற்சாலைகள், பெரிய சிகப்பு வகை தொழிற்சாலைகள், தீங்கு விளைவிக்கும் கழிவுகள், எரிப்பான் மற்றும் பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் எரிப்பான் ஆகியவற்றிலிருந்து வெளியேற்றப்படும் புகையின் தரத்தினை அளவிட்டு, தேவைப்படும் சமயங்களில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு எச்சரிக்கை விடுவிக்க காற்று தர கண்காணிப்பு மையம் உதவுகிறது. மார்ச் 31, 2018 வரை 340 தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டு அவற்றிலிருந்து வெளியேறும் 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள

நுண்துகள்கள், கந்தக–டை–ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு மற்றும் அந்தந்த தொழிற்சாலைக்கென குறிப்பிடப்பட்ட மாசு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்களின் தன்மை மற்றும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை, குறிப்பிட்ட தர அளவினை மீறும் பொழுது, அதனை உடனடியாக சரிசெய்ய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அத்தொழிற்சாலைக்கு மின்அஞ்சல் மூலம் தகவல் அனுப்பப்படுகிறது. இந்த தொடர் காற்று தர கண்காணிப்பு புள்ளி விவரங்கள் வாரிய இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது. இணைய தள முகவரி www.tnpcb.gov.in

## 6.2 நீர் தர கண்காணிப்பு மையம்

வாரிய தலைமை அலுவலகத்தில் நீர் தர கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கழிவுநீரினை வெளியேற்றும் அதிக மாசுபடுத்தும் 17 வகையான தொழிற்சாலைகள், பெரிய சிகப்பு வகை தொழிற்சாலைகள், மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரமும்

தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. இது ஆறுகள், ஏரிகள் மற்றும் பிற நீர்நிலைகளில் பொருத்தப்பட்டுள்ள சென்ஸார் கருவிகள் மூலமாக தொலைதூரத்திலிருந்தே நீரின் தரம் குறித்த தகவல்களை கண்டறியலாம். மார்ச் 31, 2018 வரை 210 தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 112 தொழிற்சாலைகள் அவற்றில் அமைக்கப்பட்டுள்ள பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்றும் நிலையத்தினை கண்காணிப்பதற்காகவும், 97 தொழிற்சாலைகள் அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தரத்தினை கண்காணிப்பதற்காகவும் இணைக்கப்பட்டுள்ளன. ஒரு தொழிற்சாலை ஆற்றில் கலக்கும் கழிவுநீர் தரத்தினை கண்காணிக்க இணைக்கப்பட்டுள்ளது. மேலும், தாமிரபரணி ஆற்றில் மூன்று இடங்களில் நிறுவப்பட்டுள்ள நீர்தர கண்காணிப்பு கருவிகளும் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. நீரின் அமிலத்தன்மை, மொத்தம் கரைந்துள்ள திடப்பொருட்கள், நீரில் கரைந்துள்ள பிராணவாயு மற்றும் நீரோட்டத்தின் அளவு ஆகியவை இம்மையத்தின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

## 7. கழிவு மேலாண்மை

இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகம் **2016** ஆம் ஆண்டு கழிவுகள் மேலாண்மைக்காக முன்பு அமலில் இருந்த விதிகளுக்கு பதிலாக ஆறு புதிய கழிவு மேலாண்மை விதிகளை அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளில், ஒவ்வொரு வகையான கழிவுகளுக்கும் அதனை உற்பத்தி செய்வோர் மற்றும் கையாள்வோர்களின் பொறுப்பு பற்றியும், கழிவுகள் சேகரித்தல், சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல் பற்றியும், கழிவுகள் சுத்திகரிப்பு செய்யும் அமைப்புகள் எட்ட வேண்டிய தர குறியீடுகள் பற்றியும் விரிவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 7.1 திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை விதிகள் **2016** ன்படி திடக்கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்லுதல், செயலாக்கம் செய்தல், மறுசுழற்சி செய்தல், சுத்திகரிப்பு செய்தல் மற்றும் அகற்றுதல் முதலியவை உள்ளாட்சி அமைப்புகளின் கடமையாகும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு திடக்கழிவுகளை கையாள்வதற்காக அங்கீகாரம் வழங்குதல், திடக்கழிவுகள் செயலாக்கம் செய்தல் மற்றும்

அகற்றுதலுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புகள், சுற்றுச்சூழல் காரணிகள் மற்றும் விதிமுறைகளை சரிவர பின்பற்றுகின்றனவா என்பதை கண்காணித்தல் மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பொறுப்பாகும்.

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் திடக்கழிவுகளை கையாளுவதற்கு பயனாளிகளிடமிருந்து கட்டணம் வசூலிக்கவும் மற்றும் அபராதம் விதிக்கவும் சட்ட விதிமுறைகளை உருவாக்கி உள்ளன. திடக்கழிவுகளை கையாள அங்கீகாரம் பெறுவதற்கு உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து மார்ச் 15, 2018 வரை 160 விண்ணப்பங்கள் வாரியத்தில் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 121 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள 39 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. தமிழ் நாட்டில் நாள் ஒன்றுக்கு 14,658 டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. அதில் 14,417 டன் கழிவுகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் சேகரிக்கப்பட்டுஅகற்றப்படுகிறது. தமிழ்நாட்டில் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பிரச்சனைகளை எதிர்கொள்வதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## 7.2 பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை

பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு நமது தினசரி வாழ்க்கையில் ஒருங்கிணைந்த ஒன்றாக மாறிவிட்டது. பிளாஸ்டிக் பொருட்கள் மக்கும் தன்மை இல்லாததததால் அதன் கழிவுகளை சரியான முறையில் சேகரித்து கையாள்வது மிகவும் அவசியமாகின்றது. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், **2016**–ன்படி பிளாஸ்டிக் கழிவுகளை தரம்பிரித்தல், சேகரித்தல், சேமித்தல், கொண்டு செல்லுதல், செயலாக்கம் செய்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவை உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும். இவ்விதிகளின்படி, புதிய மற்றும் மறு சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் பைகள் **50** மைக்ரான் தடிமனுக்கு கீழ் இருக்கக்கூடாது. பிளாஸ்டிக் பைகள், மறுசுழற்சி முறையில் பிளாஸ்டிக் பைகள், பல அடுக்கு பேக்கேஜிங் போன்ற பொருட்கள் தயாரிப்போர் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை செயலாக்கம் அல்லது மறுசுழற்சி செய்வோர் மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். பதிவுச்சான்றிதழ் வழங்குதல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் மற்றும் பிளாஸ்டிக்

கழிவுகள் அகற்றுதல் ஆகிய செயல்கள் விதிகளின்படி செயல்படுத்தப்படுகின்றதா என்பதை கண்காணிப்பது மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பொறுப்பாகும். இந்த விதிகள் முறையாக செயல்படுத்தபடுகின்றனவா என்பதனை கண்காணிக்க அரசாணை எண். 148 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள் 25.10.2016–ன் படி மாநில அளவிலான ஆலோசனை குழுவினை அரசு அமைத்துள்ளது.

இது வரை வாரியம் 305 பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் 17 பல்அடுக்கு பிளாஸ்டிக் பேக்கேஜிங் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு பதிவு சான்றிதழ் வழங்கியுள்ளது. மேலும் பிளாஸ்டிக் பைகள் மற்றும் மக்கும் தன்மையுள்ள பைகள் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பயனாளிகள் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளுக்கு இணங்கி செயல்படவேண்டும் என வலியுறுத்தி 16.02.2017 அன்று வாரியம் செய்தித்தாள்களில் பொது அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

## 7.3 கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை

கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள், **2016**, கட்டிடம் கட்டுதல் மற்றும் இடித்தல் மூலம் கழிவுகளை உற்பத்தி செய்யும் தனிநபர், நிறுவனம் மற்றும் அதிகார அமைப்பு ஆகியோருக்கு பொருந்தும். இவ்விதிகளின்படி, கட்டிட கட்டுமானம் மற்றும் இடிமானங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளில் காங்கிரீட், மண் மற்றும் இதர பொருட்கள் என தரம் பிரித்து அவற்றினை உள்ளாட்சி அமைப்புகள் அறிவுறுத்தியபடி சேகரிப்பு செய்வது கட்டிடம் கட்டுவோரின் பொறுப்பாகும். மேற்படி சேகரிப்பு செய்த கழிவுப்பொருட்களை கொண்டு செல்லுதல், செயலாக்கம் செய்தல் மற்றும் அகற்றுதல் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும். மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கி, விதிகளை சரியான முறையில் அமல்படுத்துகின்றார்களா என்பதை கண்காணிக்கிறது. மேற்படி விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வாரியம் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும் அறிவுறுத்தியுள்ளது.

## 7.4 மின்னணுக் கழிவு மேலாண்மை

மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி மின் மற்றும் மின்னணு சாதனங்களை தயாரிப்போர், அவர்கள் தயாரிக்கும் பொருட்களால் உண்டாகும் மின்னணு கழிவுகளை ஒருமுகப்படுத்தி சேகரிப்பு செய்வது அவர்களின் பொறுப்பாகும். மின் மற்றும் மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்வோர், பிரித்தெடுப்போர், மறுசுழற்சி செய்வோர், சீர் செய்வோர், மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் அங்கீகாரம் பெற வேண்டும். மின்னணுக் கழிவுகள் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் கையாளப்படுகின்றதா என்பதை மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணிக்க வேண்டும். மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியம் இவ்விதிகளை சிறந்த முறையில் அமல்படுத்த பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு, மின்னணு கழிவுகளை சரிவர கையாள்வதற்காக தமிழ்நாடு மின்னணு கழிவு கொள்கை 2010 என்பதனை வெளியிட்டுள்ளது. இதுவரை தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 22 தொழிற்சாலைகளுக்கு மின்னணு கழிவுகளை கையாள்வதற்கான அங்கீகாரம் வழங்கியுள்ளது (17– பிரித்தெடுப்போர், 5– மறுசுழற்சி செய்வோர்)

## 7.5 மருத்துவக் கழிவு மேலாண்மை

மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள், **2016**, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் கையாளுவோர் அனைவருக்கும் பொருந்தும். மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து சுத்திகரிப்பு செய்து அகற்றுவது, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவோர்களின் பொறுப்பாகும். மருத்துவக்கழிவுகளை கையாளும் நபர்களின் ஆரோக்கியம், பொதுமக்கள் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் மாசு அடையாமல் பாதுகாக்கும் வண்ணம் மருத்துவக் கழிவுகள் சரியான முறையில் சேகரிக்கப்பட்டு கையாள்வது மிகவும் அவசியம் ஆகும். மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகளை அனைத்து மருத்துவமனைகளும் சரிவர பின்பற்றுகின்றனவா என்பதை உறுதி செய்வது மாநில அரசின் சுகாதாரத்துறையின் பொறுப்பாகும். மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, அந்நிறுவனங்கள் விதிகளை சரிவர கடைபிடிக்கின்றனவா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தை சார்ந்ததாகும். விதிகளை

முறையாக பின்பற்றுதல் மற்றும் நடைமுறைபடுத்துதல் சம்மந்தமாக அறிவுரை வழங்க மாநில அளவிலான ஆலோசனை குழு மற்றும் அனைத்து மாவட்ட அளவிலான ஆலோசனை குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளது.

வாரியம் இது வரை 3,539 மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் நாள் ஒன்றுக்கு 43.7 டன் மருத்துவ கழிவுகள் உற்பத்தியாகிறது. 3539 மருத்துவமனைகளும், பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் நிலையத்துடன் ஒப்பபந்தம் செய்துள்ளன. தமிழ்நாட்டில் 11 பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. இந்த சுத்திகரிப்பு நிலையங்கள் கழிவுகளை சேகரித்து, எடுத்துச்சென்று, அறிவியல் முறைப்படி சுத்திகரிப்பு செய்து அகற்றுகின்றன. மருத்துவமனைகள் வாரிய அங்கீகாரத்திற்கு விண்ணப்பம் செய்வதை எளிமையாக்கும் விதமாக, இணையவழி மூலம் விண்ணப்பம் செய்யும் முறையை மார்ச் 2016–ல் வாரியம் அறிமுகம் செய்தது. அதன்படி விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு இணையவழி மூலம் அங்கீகாரம் வழங்கப்படுகிறது. மார்ச் 15,

2018 வரை 1,156 மருத்துவமனைகளுக்கு இணையவழியில் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### 7.6 தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை

தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016–ன்படி தீங்குவிளைவிக்கும் கழிவுகளை சுத்திகரிப்பு செய்து அகற்றுவது அக்கழிவுகளை உற்பத்தி செய்வோரின் பொறுப்பாகும். தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான அங்கீகாரத்தினை மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்க வேண்டும்.

வாரியம் இது வரை தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் 3,776 தொழிற்சாலைகளை கண்டறிந்து இவ்விதிகளின் கீழ் அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. கடந்த 2016–17–ம் ஆண்டு மாநிலத்தில் 6,40,732 டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் உற்பத்தியாயின. இவற்றில் 2,44,670 டன் கழிவுகள் தனியார் அல்லது பொது நில நிரப்பு செய்யப்பட்டது. 28,546 டன் கழிவுகள் எரிப்பான் மூலம் தனியார் அல்லது பொது இடத்தில் எரிக்கப்பட்டது. 85,831 டன் கழிவுகள் சிமெண்ட் உற்பத்திக்கு இணை செயலாக்க

பொருளாக உபயோகப்படுத்தப்பட்டது. **2,48,712** டன் மறு சுழற்சிக்கு அனுப்பப்பட்டது. மீதம் உள்ள கழிவுகள் தொழிற்சாலை வளாகத்திலேயே சேமிக்கப்பட்டு விரைவில் பாதுகாப்பாக வெளியேற்றப்பட உள்ளது.

தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி விஞ்ஞான முறையில் பாதுகாப்பாக கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை வாரியம் எடுத்து வருகிறது. தீங்கு விளைவிக்கும் கழிவுகளை பாதுகாப்பாக சேகரித்து சுத்திகரிப்பு செய்து அகற்றும் பொது சுத்திகரிப்பு நிலையங்கள் தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் உள்ளன. அவை திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிபூண்டியிலும், விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தாலுக்காவில் உண்டுருமிகிடாக்குளம் என்னும் இடத்திலும் அமைந்துள்ளன. தொழிற்சாலைகள் வாரிய அங்கீகாரம் பெறுவதை எளிமையாக்கும் வகையில் மார்ச் **2016–**ல் இணையவழி மூலம் விண்ணப்பிக்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இணையவழி மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இணையவழி மூலமாகவே அங்கீகாரங்கள் வழங்கப்படுகின்றன. மார்ச் **15, 2018** வரை **2,290** தொழிற்சாலைகளிடமிருந்து

விண்ணப்பங்கள் பெறப்பட்டு இணையவழி மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன.

## 8. நீரின் தன்மை கண்காணிப்பு

நீர் (மாசுத்தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டம்) 1974ன் முக்கிய குறிக்கோள் நீரின் தன்மையை பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் மீட்டெடுத்தல் ஆகும். இந்த குறிக்கோளினை எட்டுவதற்கு நீர் நிலைகளின் தன்மையை கண்காணித்தல் அவசியமாகிறது. எனவே தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து, புவி சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம் மற்றும் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டம் ஆகியவற்றை மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் 70% நிதி உதவியுடன் செயல் படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் கீழ் மாநிலத்தில் உள்ள பெரிய நதிகள் மற்றும் குளங்களில் மொத்தம் 55 இடங்களில் மாதந்தோறும் நீர்மாதிரி எடுக்கப்பட்டு நீரின் தன்மை கண்காணிப்படுகிறது. காவேரி மற்றும் அதன் உப நதிகளில் 33 இடங்களிலும், பாலாறு நதியில் ஒரு இடத்திலும், வைகை நதியில் ஒரு இடத்திலும், தாமிரபரணி ஆற்றில் 12 இடங்களிலும், உதகமண்டலம்,

கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், போரூர், பூண்டி, பழவேற்காடு, மற்றும் செங்குன்றம் ஆகிய 8 ஏரிகளிலும் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு நீரின் தன்மையை கண்காணிக்கப்படுகிறது. ஆய்வு முடிவுகளின்படி இந்த நீர் நிலைகளின் தன்மை முறையாக சுத்திகரிக்கப்பட்டு குடிப்பதற்கு ஏற்ற நிலையில் அதாவது பிரிவு ‘பி’, ‘சி’, அல்லது ‘டி’ என்று தர அளவில் உள்ளன.

கிராம மற்றும் நகர்புறங்களிலிருந்து வெளியேறும் வடிகால் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யாமல் நீர்நிலைகளில் வெளியேற்றுவதும் மற்றும் திடக்கழிவினை கரையோரங்களில் கொட்டுவதும் நீர் நிலைகள் மாசடைவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றன. எனவே இவற்றிக்கு முக்கியத்துவம் கொடுத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என உள்ளாட்சி அமைப்புகளை வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

## 8.1 சென்னை நீர் வழிகள் தர கண்காணிப்பு திட்டம்

சென்னையில் அடையாறு, பக்கின்காம் கால்வாய், கூவம் மற்றும் ஓட்டேரி கால்வாய் ஆகிய நான்கு நீர் வழிகள் உள்ளன.

இவற்றின் தன்மையினை வாரியம் மாதந்தோறும் நீர் மாதிரி எடுத்து கண்காணித்து வருகின்றது. நீர் நிலைகள் மற்றும் வடிகால் கழிவுநீர்/ தொழிற்சாலைக் கழிவுநீர் மேற்படி நீர் நிலைகளில் கலக்கும் இடங்களிலும் நீர் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. மொத்தம் 30 இடங்களில் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. ஆய்வின் முடிவுகள் உள்நாட்டு நீர் நிலை தரம் IS 2296– 1982 பிரிவு ஏ–உடன் ஒப்பிட்டு பார்க்கும் போது பி.ஒ.டி, மொத்தம் கரைந்துள்ள திடப்பொருட்கள் மற்றும் குளோரைடு ஆகிய காரணிகள் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக காணப்படுகிறது. இதற்கு காரணம் வடிகால் கழிவுநீர் நீர் நிலைகளில் கலத்தல்ஆகும். மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (தென் மண்டலம்) உத்தரவின்படி கூவம் நதியினை தூய்மை படுத்த சம்பந்தப்பட்ட அரசு துறைகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

## 8.2 தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள்

சாயத் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளில் நீர் நிலைகளின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு, வாரியம் காளிங்கராயன் வாய்க்கால் மற்றும் நொய்யல் ஆற்றில் ஒவ்வொன்றிலும் மூன்று இடங்களில் இணையவழி தொடர் நீர் தர கண்காணிப்பு

நிலையங்கள் அமைத்துள்ளது. இது போன்று தாமிரபரணி ஆற்றிலும் மூன்று இடங்களில் இணையவழி தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வாரிய நீர் தர கண்காணிப்பு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களின் மூலம் நீரின் அமில கார சமநிலை, மொத்தம் கரைந்துள்ள திடப் பொருட்கள், கரைந்துள்ள பிராண வாயு அளவு ஆகிய காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. இதுபோன்று காவிரி ஆற்றிலும் பவானி ஆற்றிலும் தலா மூன்று இடங்களில் கண்காணிப்பு நிலையங்கள் அமைக்க வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**9. சுற்றுப்புற காற்றின் தர கண்காணிப்பு**

பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களும் உயிர்வாழ காற்று மிகவும் இன்றியமையாதது ஆகும். இயற்கையினாலும் மற்றும் தொழிற்சாலைகள், வாகனப் போக்குவரத்து, திடக்கழிவினை எரித்தல், பட்டாசு வெடித்தல் போன்ற செயல்களினாலும் சுற்றுப்புற காற்று மாசடைகிறது. சுற்றுப்புற காற்றின் தன்மையை அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் 50% நிதி உதவியோடு தேசிய காற்று தர

கண்காணிப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 8 பெரு நகரங்களில் மொத்தம் 28 இடங்களில் சுற்றுப்புற காற்றின் தரத்தினை கண்காணிக்கின்றது. அவை சென்னையில் 8 இடங்கள், கோயம்புத்தூரில் 3 இடங்கள், மதுரையில் 3 இடங்கள், சேலத்தில் ஒரு இடம், திருச்சிராப்பள்ளியில் 5 இடங்கள், தூத்துக்குடியில் 3 இடங்கள், மேட்டூரில் 2 இடங்கள் மற்றும் கடலூரில் 3 இடங்கள் ஆகும். காற்றில் கலந்துள்ள ஐந்து மாசு காரணிகள் அதாவது 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு மற்றும் அமோனியா ஆகியவை கண்காணிக்கப்படுகின்றன. கந்தக–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு, மற்றும் அமோனியா வாயுக்களின் சராசரி அளவுகள் கண்காணிப்பு நடத்திய அனைத்து இடங்களிலும் பரிந்துரைக்கப்பட்ட காற்றுத்தர அளவீடுகளுக்குட்பட்டு உள்ளது. சுவாசிக்கும்போது உட்செல்லக்கூடிய 10 மைக்ரான் அளவுக்கு கீழ் உள்ள மிதக்கும் நுண்துகள்களின் அளவு சில இடங்களில் அதிகமாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை ஆகும்.

மேற்படி ஆய்வு முடிவுகளின்படி, தூத்துக்குடி மாநகரம் ‘காற்று தரத்தினை அடையாத நகரம் (Non-Attainment City)’ என மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் அறிவித்துள்ளது. எனவே, தூத்துக்குடி மாநகரத்தின் காற்று தரத்தினை மேம்படுத்துவதற்கான செயல் திட்டம் சம்பந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்து தயாரிக்கப்பட்டு அதனை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## 9.1 தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தில் ஏழு இடங்களில் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை வாரிய நிதி மூலம் அமைத்து இயக்கி வருகின்றது. சென்னையில் நான்கு இடங்கள் அதாவது கோயம்பேடு, ராயபுரம், பெருங்குடி, கொடுங்கையூர் ஆகிய இடங்களிலும் மற்றும் கும்மிடிப்பூண்டி சிப்காட், தூத்துக்குடி சிப்காட், பெருந்துறை சிப்காட் ஆகிய தொழில் வளாகங்களிலும் அமைக்கப்பட்டு இயக்கத்தில் உள்ளன. இந்நிலையங்கள் மூலம் காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவுக்கு கீழ் உள்ள நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன்

டை ஆக்ஸைடு, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு மற்றும் பென்சீன் ஆகிய வாயு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. மேலும் மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் 50% நிதி உதவியுடன் மணலியில் ஒரு தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையம் இயக்கத்திலும் மற்றும் கோயம்புத்தூரில் ஒரு நிலையம் அமைக்கப்பட்டும் வருகின்றன. மேலும் மாநிலத்தின் பெரு நகரங்கள் மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளில் சுற்றுப்புற காற்றின் தரத்தினை தொடர்ந்து கண்காணித்து புள்ளிவிபரம் சேகரிக்கும் வகையில் 25 தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை தனது நிதியிலிருந்து நிறுவுவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

### 9.2 நடமாடும் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையம்

பண்டிகை நாட்களில் சென்னை மாநகரின் பல்வேறு இடங்களில் காற்றின் தரத்தினை கண்காணிக்கவும், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வாரியம் ஒரு நடமாடும் தொடர் சுற்றுச் புற காற்று தர கண்காணிப்பு நிலையத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. சென்னை மாநகரில் காற்று மாசு குறித்து புகார் வரும்போது அவ்விடத்திலும் மற்றும்

வாகனப் போக்குவரத்து அதிகமாக உள்ள இடங்களிலும் காற்றின் தரத்தினை கண்டறிய இந்த நடமாடும் நிலையம் பயன்படுத்தப்படுகிறது. தீபாவளி மற்றும் போகிப் பண்டிகை நாட்களில் இந்நிலையம் மூலம் காற்றின் தரம் கண்காணிப்பு செய்யப்படுகிறது.

## 9.3 தேசிய சுற்றுப்புற ஒலி அளவு கண்காணிப்பு திட்டம்

வேகமான தொழில் வளர்ச்சி, நகரமயமாதல், நவீன போக்குவரத்து, மக்கள் தொகை பெருக்கம் மற்றும் அதிகரித்து வரும் மனித நடவடிக்கைகள் ஆகியவற்றால் ஒலி மாசு ஏற்படுகிறது. ஒலி மாசு தூக்கத்தினை கெடுப்பதோடு கவனக்குறைபாடு மற்றும் உடல், மன ஆரோக்கியத்தினை குறைப்பதாக உள்ளது. சென்னை நகரின் சுற்றுப்புற ஒலி அளவினை கண்காணிக்க வாரியம், மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து 10 இடங்களில் சுற்றுப்புற ஒலி அளவினை தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகளை பொருத்தி ஒலி அளவினை பதிவு செய்து வருகின்றது. அவ்விடங்கள். 1. எழும்பூர், 2. தியாகராய நகர், 3. பெரம்பூர் 4. கிண்டி, 5. திருவல்லிக்கேணி, 6. பள்ளிக்கரணை, 7. வேளச்சேரி, 8. வண்ணாரப்பேட்டை, 9. அண்ணாநகர்,

**10.** சௌக்கார்பேட்டை. பதிவு செய்யப்பட்ட புள்ளிவிவரம்படி சென்னை மாநகரின் ஒலி அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவினைவிட கூடுதலாக இருப்பது காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் வாகனப் போக்குவரத்தால் ஏற்படும் இரைச்சல் ஆகும்.

## 10 சட்ட நடவடிக்கைகள்

### 10.1 மேல்முறையீட்டு ஆணையம்

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் **1974** –பிரிவு **28–**ன் படியும், காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் **1981** பிரிவு **31–**ன் படியும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எந்தவொரு நபரும், ஆணை கிடைக்க பெறப்பட்ட **30** தினங்களுக்குள் மேல்முறையீட்டு ஆணையத்திடம் மேல் முறையீடு விண்ணப்பம் செய்யலாம். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு மேல் முறையீட்டு ஆணையம் ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி தலைமையில் இரண்டு தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மார்ச் **15, 2018** வரை **486** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதில் **434** வழக்குகள் தீர்வு

செய்யப்பட்டுள்ளன. மீதம் உள்ள 52 வழக்குகள் விசாரணையில் உள்ளன. ஆணையம் செயல்படுவதற்கான நிர்வாகம் மற்றும் நிதி உதவியினை வாரியம் வழங்கி வருகின்றது.

## 10.2 தேசிய பசுமை தீர்ப்பாயம்

தேசிய தீர்ப்பாயம் சட்டம் 2010–ன் படி, பிரிவு 28, 29 மற்றும் 33அ– நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974, பிரிவு 31 காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 மற்றும் பிரிவு 5 சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986–ன்படி மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மேல்முறையீட்டு ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை மற்றும் முடிவுகளினால் இடருற்ற நபர்கள் மேற்கூறிய ஆணைகள் கிடைக்க பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம். இதற்காக மத்திய அரசு தேசிய தீர்ப்பாயத்தை ஏற்படுத்தியுள்ளது. தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு புது டெல்லியிலும், தென் மண்டலத்திற்கான தீர்ப்பாயத்தின் அமர்வு சென்னையிலும் இயங்கி வருகின்றன. மார்ச் 15, 2018 வரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சம்மந்தமான 757 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 447

வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள **310** வழக்குகள் விசாரணையில் உள்ளன.

## 10.3 மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்கு எதிரான நடவடிக்கை

சட்ட விதிமுறைகளுக்கு உட்படாமல் விதிகளை மீறி செயல்படும் தொழிற்சாலைகள் மீது வாரியம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அவ்வகையான தொழிற்சாலைகள் மூடப்பட்டும் மற்றும் இடித்தும் அகற்றப்படுகின்றன. மாண்புமிகு உச்சநீதிமன்றம் நீதிபேராணை எண் **375/2012–ல் 22.02.2017** அன்று வழங்கிய உத்தரவின்படி, கழிவுநீரை வெளியேற்றும் தொழிற்சாலைகள் நிர்ணயக்கப்பட்ட தர அளவுகளை எட்டுவதற்கு தகுந்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மூன்று மாத காலத்திற்குள் அமைத்திட வேண்டும் என செய்தித்தாளில் **10.05.2017** அன்று பொது அறிவிப்பினை வாரியம் வெளியிட்டது. அதன்பின் குறிப்பிட்ட கால அளவில் வாரியம் நிர்ணயித்த தர அளவுகளை எட்டாத தொழிற்சாலைகளுக்கு முகாந்திர கடிதம் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து விதிகளை மீறி செயல்பட்டுவந்த தொழிற்சாலைகளுக்கு மீண்டும் ஒரு முறை

நேரில் விசாரணை மேற்கொண்டு குறைகளை நிவர்த்தி செய்ய மேலும் ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அதன் பிறகும் தொடர்ந்து விதிகளை மீறி இயங்கி வந்த தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்திரவு வழங்கப்பட்டது. ஏப்ரல் 1, 2017 முதல் மார்ச் 15, 2018 வரை 8205 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர கடிதமும், 351 தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்தரவும் வழங்கப்பட்டன.

துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள ஈரோடு, நாமக்கல், கரூர், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள நீர் நிலைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் ஈரோடு மற்றும் திருப்பூரில் இரண்டு பறக்கும் படைகளை வாரியம் அமைத்துள்ளது. இதன்மூலம் அங்கீகரிக்கப்படாமல் சட்ட விரோதமாக செயல்படும் தொழிற்சாலைகள் ஆய்வு செய்யப்பட்டு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு மூலம் அகற்றப்படுகிறது. ஏப்ரல் 1, 2017 முதல் மார்ச் 15, 2018 வரை சட்ட விரோதமாக செயல்பட்ட 255 தொழிற்சாலைகள் அகற்றப்பட்டன. இம்மாவட்டங்களில் உள்ள ஒருங்கிணைப்பு குழுவின் செயல்பாட்டை கருத்தில் கொண்டு அரசாணை (நிலை) எண். 23 சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சுற்றுச்சூழல்.1) துறை நாள். 01.03.2018–ன் படி, நீர்நிலைகளில்

சுத்திகரிக்கப்படாத கழிவுப்பொருட்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்து மாவட்டங்களிலும் ஒருங்கிணைப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 11. வாரியத்தின் மற்ற நடவடிக்கைகள்

### 11.1 குறை தீர்வு மையம்

தொழில் முனைவோர் மற்றும் திட்டம் தொடங்குவோர் வாரிய இசைவாணை வேண்டி விண்ணப்பிக்கும் போது அவர்களுக்கு மாசு கட்டுப்பாடு முறைகளை கையாள நவீன தொழிற்நுட்பம் மற்றும் தூய்மை தொழில்நுட்பத்தினை எடுத்துரைக்கும் வகையிலும் மற்றும் மாசு சம்பந்தமாக பொது மக்களின் புகார்களுக்கு தீர்வு காணும் வகையிலும் வாரிய தலைமை அலுவலகத்தில் குறைதீர்வு மையத்தினை வாரியம் ஏற்படுத்தியுள்ளது. இம்மையம் **08.02.2018** முதல் இயங்கி வருகின்றது. இம்மையத்தை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண் **044–22353154.**

## 11.2 இணையவழி குறை தீர்வு மையம்

பொதுமக்கள், தொழிற்சாலை மாசு சம்மந்தமான புகார்களை எளிதில் தெரிவித்து அதன் மீது உரிய நடவடிக்கையை விரைவில் எடுக்கும் நோக்கத்துடன் இணையதளம் மூலமாக புகார் தீர்வு காணும் முறையை வாரியம் மார்ச் **2016–ல்** அறிமுகப்படுத்தியது. (http://www.pcbolgprs.in). புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு மனுதாரருக்கு பதில் அளிக்கப்படுகிறது. ஏப்ரல் **1, 2017** முதல் மார்ச் **15, 2018** வரை **459** புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## 11.3 முதலமைச்சரின் தனி பிரிவு மற்றும் அம்மா அழைப்பு மைய புகார் பிரிவு

வாரிய தலைமை அலுவலகத்தில், முதலமைச்சரின் தனி பிரிவு மற்றும் அம்மா அழைப்பு மையம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் புகார் மீது துரித நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அதற்கென தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் புகார்கள் மீது **15** நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அம்மா புகார் பிரிவிலிருந்து பெறப்படும் புகார்கள் மீது **7** நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஏப்ரல் **1, 2017** முதல் மார்ச், **15 2018** வரை **302** முதலமைச்சரின் தனிப்பிரிவு புகார்களும், **183**

அம்மா அழைப்பு மைய புகார்களும் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. முதலமைச்சரின் தனிப்பிரிவில் இருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுத்ததைப் பாராட்டி அரசு துறைகளில் இரண்டாம் இடத்திற்கான கேடயம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **07.03.2018** அன்று வழங்கப்பட்டது.

## 11.4 சுற்றுச்சூழல் பயிற்சி மையம்

வாரிய தலைமை அலுவலகத்தில் சுற்றுச்சூழல் பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இந்த மையத்தில் சிறந்த தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுடன் இணைந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக வாரிய அலுவலர்களுக்கும், தொழில் முனைவோருக்கும் மற்றும் அரசு சாரா நிறுவன ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த **2017–18** ஆம் ஆண்டு இம்மையம் **36** பயிற்சி வகுப்புகளை நடத்தி **345** நபர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

## 11.5 தொழில்நுட்ப கருத்தரங்கங்கள்

**2017**–ஆம் ஆண்டில் வாரியம் கீழ்க்கண்ட மூன்று தொழில்நுட்ப கருத்தரங்கங்களை நடத்தியுள்ளது.

(i). கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்து தொழிற்சாலைகளுக்கு 07.01.2017 அன்று ஒருநாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கத்தில் பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து 128 பேர் கலந்து கொண்டு பயனடைந்ததனர்.

(ii). திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–பற்றி விளக்கும் வகையில் 30.01.2017 அன்று ஒருநாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளிலிருந்து 125 அலுவலர்கள் கலந்துகொண்டனர். திடக்கழிவு மேலாண்மையில் உள்ளாட்சி அமைப்புகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி விளக்கப்பட்டது.

(iii). மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 குறித்து 07.03.2017 அன்று ஒருநாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மின்னணு சாதனங்கள் தயாரிப்போர், அதிக அளவில் உபயோகிப்போர், புதுப்பிப்போர்,

பிரித்தெடுப்போர் மற்றும் மறுசுழற்சி செய்வோர் ஆகிய 80 பேர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்குகளில் மின்னணு கழிவு விதிகளின் முக்கிய அம்சங்கள் மற்றும் அவரவர்களின் பொறுப்புகள் பற்றி விளக்கப்பட்டது.

### 11.6 பொது மக்கள் கேட்புரை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் வெளியிட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்கமதிப்பீட்டு அறிவிக்கை 2006–ல் புதிய தொழிற்சாலை திட்டங்கள் துவங்குவதற்கு முன்பு அதனால் பாதிக்கப்படும் நபர்களின் கருத்துக்களை கேட்பதற்கு பொதுமக்கள் கேட்புரை கூட்டம் நடத்த வகை செய்யப்பட்டுள்ளது. இவ்அறிவிக்கையின்படி சில குறிப்பிட்ட வகையான திட்டங்களுக்கு பொதுமக்கள் கேட்புரை அவசியமாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்துகின்றது. கூட்டத்தில் பொது மக்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு அதன் அறிக்கை மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் அல்லது

மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. ஏப்ரல் 1, 2017 முதல் மார்ச், 15 2018 வரை 28 திட்டங்களுக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டங்களை வாரியம் நடத்தியுள்ளது.

## 11.7 தூய்மையான தொழில் நுட்பங்கள்

தொழிற்சாலைகள் வழக்கமான உற்பத்திமுறையினை கையாளும்போது வெளியேற்றப்படும் கழிவுகள், மறு உபயோகம் செய்யப்படாமல் இறுதியாக சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது. அதற்கு மாற்றாக தொழிற்சாலைகள் தூய தொழில் நுட்ப முறைகளை கொண்டு பொருட்கள் உற்பத்தி செய்யும் பொழுது அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் அளவு குறைக்கப்படுவதோடு, அக்கழிவு மற்ற தொழிற்சாலைக்கு மூலப்பொருளாகவும் பயன்படுகின்றது. தூய தொழில்நுட்ப முறைகள் மூலம், மூலப்பொருட்கள் பயன்பாடு மற்றும் எரி சக்தி தேவையும் குறைகின்றது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், முழுமையான சுற்றுச் சூழல் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்தியிலிருந்து வெளியேறும் கழிவுகளை இறுதியில் சுத்திகரிப்பு செய்வதை தவிர்த்து, கழிவுகளே

உற்பத்தியாகாமல் உள்ள தூய தொழில்நுட்ப முறைகளை கையாளவேண்டும் என அறிவுறுத்தி வருகின்றது. வாரியம் ஊக்கப்படுத்தியதன் பேரில் தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகள் தூய தொழில்நுட்ப செயல்முறைக்கு மாறியுள்ளன. உதாரணமாக

(i). சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்கவும் மற்றும் எரி சக்தியினை சேமிக்கவும் ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல்.

(ii). பி.பி.சி சிமெண்ட் உற்பத்தியில் 25 முதல் 30 சதவிகிதம் வரை எரிசாம்பலை பயன்படுத்துதல். இது அனல்மின் நிலையங்களில் சாம்பல் அகற்றும் பிரச்சினைக்கு தீர்வாக அமையும்.

(iii). கந்தக அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருமுறை மாற்றம் மற்றும் உட்கிரகிக்கும் தொழில்நுட்பத்தை செயல்படுத்துதல். இதன் மூலம் கந்தக–டை–ஆக்ஸைடு வாயு வெளியேற்றம் குறையும்.

(iv). செறிவூட்டப்பட்ட கரி தயாரிக்கும் தொழிற்சாலைகள், தங்கள் உற்பத்திக்கு தேவைப்படும் நீராவியினை உற்பத்தி செய்ய அதற்கென அமைக்கப்பட்ட எரிபொருளை கொண்டு இயங்கும் கொதிகலனை நிறுத்திவிட்டு, உபரி வெப்பத்தை கொண்டு இயங்கும் கொதிகலனை நிறுவியுள்ளன. இதனால் விறகு மற்றும் நிலக்கரி எரிபொருள் பயன்பாடு தவிர்க்கப்பட்டதுடன் பசுமை இல்ல வாயுக்கள் வெளியேறுவதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

(v). மரக்கூழ் மற்றும் காகித தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ–குளோரின் உருவாவதை குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினை பின்பற்றுதல்.

(vi). பொறியியல் தொழிற்சாலைகள், நீர் மாசினை தவிர்க்கும் வகையில் சயனைடு அற்ற முலாம் பூசுதல் மற்றும் சயனைடு உப்புக்கு

பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்பக்கடினப்படுத்துதலுக்கு பின்பற்றுதல்.

(vii). எரிசோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல். இதனால் நீர் மாசு தவிர்க்கப்படும்.

## 11.8 தொழில்நுட்ப நிறுவனங்கள் மூலம் அறிவியல் ரீதியான ஆய்வுகள்

(i). கடந்த ஜனவரி 28, 2017 அன்று எண்ணூர் துறைமுகத்தில் இரண்டு கப்பல்கள் மோதிக்கொண்ட விபத்தினால் கடலில் கலந்த எண்ணெய் படலத்தினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து வாரியம், ஐ.ஐ.டி, சென்னை மூலம் ஒரு ஆய்வு மேற்கொண்டது. 'கடல் சூழலில் எண்ணெய் கசிவால் ஏற்பட்ட பாதிப்பு குறித்த மதிப்பீடு' என்ற தலைப்பில் ஆய்வு அறிக்கை வாரியத்திற்கு சமர்ப்பித்துள்ளது.

(ii). கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், ராசிபாளையம் கிராமத்தில் தொழிற்சாலைகளினால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டதாக பொதுமக்கள் புகார்

அளித்தனர். அந்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்க ஐதராபாத்தில் உள்ள தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் அந்த இடத்தில் நீர் புவியியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

(iii). பூஜ்ஜிய நிலை நீர் வெளியேற்றம் (ZLD Plant) சுத்திகரிப்பு நிலைய இயக்கத்தினால் ஏற்படும் கார்பன் கால் அச்சு (Carbon Foot Print) பற்றி அறிய நவம்பர் **2017–**ல் வாரியம், சென்னை ஐ.ஐ.டி மூலம் துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஒரு ஆய்வினை மேற்கொண்டது.

(iv). அரிசி ஆலைகளின் மாசு குறியீட்டினை மதிப்பீடு செய்வதற்காக வாரியம், ஐஐடி சென்னை மற்றும் ஸ்ரீராமசந்திரா பல்கலைகழக தொழிற்நுட்ப வல்லுனர்களுடன் இணைந்து ஒரு ஆய்வு மேற்கொண்டது. ஆய்வின் அடிப்படையில் ஒற்றை வேக்காடு அரிசி ஆலைகளை (Single Boiled Rice Mills) பச்சை வகை என வாரியம் வகைப்படுத்தியுள்ளது.

(v). மணலி, கடலூர் சிப்காட், ராணிபேட்டை சிப்காட், கோயம்புத்தூர்–குறிச்சி ஆகிய தொழிற்வளாகங்களில் சுற்றுச்சூழல் மாசு குறித்து சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986–ன் படி அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு ஆய்வகத்தின்மூலம் 1.04.2017 மற்றும் 31.10.2017–ல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

(vi). கான்கிரிட் கலவை ஆலை குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு, ஆகஸ்ட் 2017–ல் இத் தொழிற்சாலைக்கான வழிகாட்டுதல்களை வாரியம் வழங்கியது.

(vii). தேசிய பசுமை தீர்ப்பாயம் தென்மண்டலம் அமர்வின் உத்தரவின்படி நிபுணர் குழு மூலம் வெப்பக் கலவை தொழிற்சாலை குறித்து விரிவாக ஆய்வு செய்து அதற்கான வழிகாட்டுதலை ஜுலை 2016–ல் வாரியம் வழங்கியுள்ளது.

(viii). திட மற்றும் ஹாலோ பிளாக் தயாரிக்கும் தொழிற்சாலை குறித்து விரிவாக ஆய்வு செய்து

அதற்கான வழிகாட்டுதலை **2016–ல்** வாரியம் வழங்கியுள்ளது.

(ix). தோல் தொழிற்சாலை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பூஜ்யநிலைக் கழிவுநீர் வெளியேற்றம் அமைப்பில் உண்டாகும் உப்பிலிருந்து சாதாரண உப்பு (NaCl) மற்றும் தொழிற்சாலைகளுக்கான உப்பு ($Na_2So_4$) என பிரித்து அதனை மறு உபயோகம் செய்வதற்கான தொழில் நுட்பத்தினை, தோல் தொழிற்சாலைகள் கூட்டமைப்பு, குஜராத் மாநிலம் பாவ் நகரில் உள்ள மத்திய உப்பு மற்றும் கடல் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் கண்டறிந்துள்ளது. அதன் அடிப்படையில் வேலூர் மாவட்டத்தில் இரண்டு உப்பு மீட்பு ஆலை (Salt Recovery Plant) அமைப்பதற்கு தோல் தொழிற்சாலைகள் கூட்டமைப்பு உத்தேசித்துள்ளது.

### 11.9 மாசு தடுப்பு திட்டங்களுக்கு நிதியுதவி

(i). வாரியம், ஈரோடு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள ஏரிகளில் சூழல் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூபாய் **25.81** கோடி

நிதியினை இயக்குநர், சுற்றுச்சூழல் துறைக்கு வழங்கியது. இதன் மூலம் ஏரிகள் தூர்வாருதல், கழிவுநீர் ஏரிக்குள் செல்லாமல் திருப்பி விடுதல், ஆழப்படுத்துதல், தடுப்புச்சுவர் கட்டுதல், ஏற்கனவே அமைந்துள்ள தடுப்பணையைப் பராமரித்தல், தோட்டம் அமைத்தல் மற்றும் மரம் நடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

(ii). வாரியம், சென்னை ஐ.ஐ.டியில் நகர மயமாக்கல், கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் சம்மந்தமான ஆராய்ச்சி மையத்தினை நிறுவுவதற்காக ரூ.3 கோடி நிதியினை வழங்கியது. இம்மையம் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல், நிலையான கட்டுமான தொழில்நுட்பங்கள், நகரமயமாக்கல் மூலம் எழும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணுவதற்கான தொழில்நுட்பங்களை கண்டறியும்.

## 11.10 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு

சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை மக்கள் புரிந்து கொள்ள விழிப்புணர்வு மிகவும் அவசியமாகின்றது. வாரியம் ஆண்டுதோறும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் கீழ்க்கண்ட முக்கிய நாட்களில் நடத்தி வருகிறது.

**11.10.1 உலக சுற்றுச்சூழல் தினம்:** ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 5 ஆம் நாள் உலக சுற்றுச்சூழல்தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் இயற்கை மற்றும் பூமியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்மந்தமாக விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படுகிறது. கடந்த ஜுன் 5, 2017 அன்று வாரியம் பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் நிகழ்ச்சிகளை நடத்தியது. இந்நாளில் தொழிற்சாலைகள் மரக்கன்றுகள் ஊன்றியும், தொழிலாளர்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தவும் செய்தனர்.

**11.10.2 ஓசோன் தினம்:** ஓசோன் படலத்தை காக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 16 ஆம் நாள் சர்வதேச அளவில் ஓசோன் தினம் அனுசரிக்கப்படுகிறது. அதன்படி செப்டம்பர்–2017–ல் வாரியம் மாவட்ட அளவில் தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து ஓசோன் தினவிழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியது.

**11.10.3 போகி திருவிழா:** டயர்கள், டியூபுகள், பிளாஸ்டிக் பொருட்கள், துணிகள் போன்ற பழைய பொருட்களை திறந்த

வெளியில் எரிக்கக்கூடாது என்று விழிப்புணர்வு பிரச்சாரங்கள் வாரியத்தால் நடத்தப்படுகிறது. துண்டு பிரசுரங்கள் வினியோகம் செய்தும் மற்றும் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. சென்னை மாநகரில், 15 இடங்களில், போகி பண்டிகைக்கு முந்தைய நாட்களிலும், போகி பண்டிகை நாளிலும், சுற்றுப்புறக் காற்று தரத்தினை வாரியம் கண்காணிக்கிறது. இதன் முடிவுகள் வாரிய இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது.

**11.10.4 விநாயகர் சதுர்த்தி திருவிழா:** நீர்நிலைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் விநாயகர் சிலைகள் தயாரிப்பதற்கு பிளாஸ்டர் ஆப் பாரீஸ் மற்றும் பெயிண்ட்டுகளை பயன்படுத்த கூடாது என்று விழிப்புணர்வு பிரச்சாரம் ஒவ்வொரு மாவட்ட தலை நகரத்திலும் நடத்தப்படுகிறது. மேலும், சிலைகள் கரைக்கப்படுவதற்கு முன்னரும் பின்பும், கண்டறியப்பட்ட நீர் நிலைகளின் நீரின் தரம் வாரியத்தால் ஆண்டுதோறும் கண்காணிக்கப்படுகிறது.

**11.10.5 தீபாவளி திருவிழா:** தீபாவளி திருநாள் அன்று 125 டெசிபெல் என்ற ஒலி அளவுக்கு மேல் ஒலி ஏற்படுத்தும் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது என்றும், மேலும் இரவு 10

மணி முதல் காலை 6 மணி வரை பட்டாசுகளை வெடிக்க வேண்டாம் என்றும், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் வாரியத்தால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வேலூர், சேலம், ஒசூர், திருப்பூர், திண்டுக்கல், கடலூர் ஆகிய நகரங்களில் சுற்றுப்புற காற்றுத்தரம் மற்றும் ஒலி அளவினை, தீபாவளிக்கு முந்தைய நாளிலும், தீபாவளி நாளன்றும் வாரியம் கண்காணித்து வருகிறது. இதன் முடிவுகள் வாரிய இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது.

**11.10.6 கார்த்திகை மகா தீபத்திருவிழா:** திருவண்ணாமலையில் நடைப்பெறும் கார்த்திகை மகா தீபத்திருவிழாவின்போது பிளாஸ்டிக்குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் வாரியத்தின் மூலம் நடத்தப்படுகின்றன. அதன்படி, பிளாஸ்டிக் பைகளை தவிர்த்து அதற்குமாற்றான துணிப்பை, காகிதப்பை, சணல் பை போன்றவற்றை பயன்படுத்த ஊக்குவிக்கும் வண்ணம் கார்த்திகை மகா தீபத்திருவிழாவிற்கு துணிப்பை மற்றும் சணல் பையுடன் வரும் பொது மக்களுக்கு கூப்பன் வழங்கி, இறுதியில் குலுக்கல் மூலம் தேர்வு செய்து, தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள்

பரிசு அளிக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி பொது மக்களிடையே பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

**11.10.7 அரசு பொருட்காட்சிகள்:** வாரியம், சென்னை தீவுத்திடலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அரசு பொருட்காட்சியிலும் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சிகளிலும் சிறப்பாக பங்கேற்று வருகின்றது. இப்பொருட்காட்சிகளில் வாரியம் சார்பில் அரங்கம் அமைத்து கழிவுநீர்சுத்திகரிப்பு நிலையம், காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்கள், திடக்கழிவு மேலாண்மை பற்றிய மாதிரி வடிவமைப்புகள், மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கிறது. 2017–2018 ஆம் ஆண்டில் வாரியம் சென்னை தீவுத்திடல், திருநெல்வேலி, நாகர்கோவில், மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், சேலம், நாமக்கல், கடலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அரசு பொருட்காட்சிகளில் பங்குபெற்றது. இதில் அமைக்கப்பட்டிருந்த வாரிய அரங்கினை அதிக அளவில் மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டனர். 2017–ஆம் ஆண்டு சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 43–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில்துறை

பொருட்காட்சியில் அரங்கம் அமைத்து சிறப்பாக காட்சிப்படுத்தியதற்காக வாரியத்திற்கு மூன்றாம் பரிசு வழங்கப்பட்டது.

**11.10.8 பசுமை விருதுகள்:** தொழிற்சாலைகளை ஊக்கப்படுத்துவதற்காக வாரியம் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த வழிமுறைகளை மேற்கொண்டு, புகை வெளியேற்றம், பசுமை போர்வை ஏற்படுத்துதல், கழிவுநீர் வெளியேற்றம், திடக்கழிவுகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மேலாண்மை போன்றவற்றில் சிறந்த தரத்தினை அடையும் தொழிற்சாலைகளுக்கு பசுமை விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறது. மேலும், இதுபோன்று மாவட்டத்தின் சுற்றுச்சூழலினை மேம்படுத்த சிறப்பாக செயல்படும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் பசுமை விருதுகள் வழங்கப்படுகிறது. கடந்த 2017 ஆம் ஆண்டு முதல், வாரியம் கல்வி நிறுவனங்களுக்கும், பல்கலைகழகங்களுக்கும், தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் விருதுகள் வழங்கி வருகிறது. நிபுணர் குழுக்களின் மூலம் விருது பெறுவோர் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்படுகின்றன.

## 12. 2017–18 ஆம் ஆண்டில் வாரியத்தின் முக்கிய செயல்பாடுகள்

(i). அதிக மாசு ஏற்படுத்தும் 17 வகையான தொழிற்சாலைகள் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரம் மற்றும் புகைபோக்கி வழியாக வெளியேற்றப்படும் புகையின் தரத்தினை உடனுக்குடன் மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அதன் அளவீடுகள் வாரிய இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது.

(ii). தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்கவும், மற்றும் தொழில்முனைவோரும், பொது மக்களும் பயன்பெறும் வகையிலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நாமக்கல் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களை பிரித்து குமாரபாளையம், கும்மிடிபூண்டி ஆகிய இரண்டு இடங்களில் புதிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களை ஏற்படுத்தி உள்ளது.

(iii). தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்கவும், மற்றும் தொழில்முனைவோரும் பொது மக்களும் பயன்பெறவும் கோயம்புத்தூர் மற்றும் மதுரை மண்டல அலுவலகங்களை பிரித்து திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இரண்டு மண்டல அலுவலகங்களை நிறுவி உள்ளது.

(iv). தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேலும் சிறப்பாக செயலாற்றும் வகையில், பிற மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களிலும் மற்றும் மாநில அரசு பொறியியல் துறைகளிலும் உள்ளது போல் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் என்ற புதிய பணியிடத்தினை வாரியம் உருவாக்கி உள்ளது.

(v). தொழிற்சாலைகளுக்கு விரைவாக இசைவாணை வழங்கும் பொருட்டு, வாரிய கள அலுவலர்களுக்கு குறிப்பிட்ட வகையான தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

(vi). வாரிய தலைமை அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களுக்கு இடையே காணொளி மூலம் கூட்டம் நடத்தும் வசதி ரூ. 35 லட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

(vii). பெருந்துறை சிப்காட் வளாகத்தில் உள்ள தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்க வசதியாக, பெருந்துறை சிப்காட் வளாகத்தில் ரூ.215 லட்சம் செலவில் ஒரு மாவட்ட சுற்றுசூழல் ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(viii). வாரியத்தின் வேலூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு நீர் மற்றும் காற்று பரிசோதனை செய்வதற்கான நவீன கருவிகள் ரூ.150 லட்சம் செலவில் வழங்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

(ix). வாரியத்தின் கோயம்புத்தூர்(வடக்கு), கோயம்புத்தூர்(தெற்கு), வாணியம்பாடி, பெருந்துறை, ஈரோடு மற்றும் ஒரகடம் ஆகிய ஆறு

இடங்களில் உள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் வேலூர் மண்டல இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் ஆகியவற்றிற்கு புதிய கட்டிடங்கள் ரூ.14.41 கோடி செலவில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்படுள்ளன. மேலும் திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரண்டு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களுக்கு ரூ.4 கோடி செலவில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

(x). சுற்றுசூழலை பாதுகாக்கும் வகையில் சிறப்பாக செயல்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு பசுமை விருதுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.10.2017 அன்று வழங்கப்பட்டது.

(xi). ஈரோடு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள ஏரிகளில் சூழல் மீட்புப் பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.25.81 கோடி நிதி, இயக்குநர், சுற்றுச்சூழல் துறைக்கு வழங்கப்பட்டது.

(xii). சென்னை, ஐ.ஐ.டியில் நகரமயமாக்கல், கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மையம் நிறுவுவதற்காக ரூ.3 கோடி நிதி வழங்கப்பட்டது.

(xiii). இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமையினை அமலாக்கம் செய்து சிறந்த முறையில் செயல்படுத்தி வருவதைப் பாராட்டி ஸ்காட்ச் குழுமம் ஸ்காட்ச் விருதினை வாரியத்திற்கு வழங்கியுள்ளது.

(xiv). முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுத்ததைப் பாராட்டி அரசுத்துறைகளில் இரண்டாம் இடத்திற்கான பரிசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 7.3.2018 அன்று வாரியத்திற்கு வழங்கப்பட்டது.

(xv). 2017–ஆம் ஆண்டு சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 43–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில்துறை பொருட்காட்சியில் அரங்கம் அமைத்து சிறப்பாக காட்சிப்படுத்தியதற்காக வாரியத்திற்கு மூன்றாம் பரிசு வழங்கப்பட்டது.

(xvi). வாரியத்தில் பணிபுரியும் பணியாளர்கள் உடல் நலன் பேணும் வகையில் வாரிய தலைமை அலுவலகத்தில் ஒரு உடற்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டு **8.2.2018** முதல் பயன்பாட்டில் உள்ளது.

(xvii). தொழில் முனைவோருக்கு சுற்றுச்சூழல் சம்மந்தமான சட்ட விதிகளை விளக்கும் வகையிலும் மற்றும் மாசு சம்மந்தமான பொதுமக்களின் புகார் மீது தீர்வு காணும் வகையிலும் **08.02.2018** அன்று வாரிய தலைமை அலுவலகத்தில் குறை தீர்வு மையம் துவங்கப்பட்டுள்ளது.

**K.C. கருப்பணன்**
அமைச்சர் – சுற்றுச்சூழல்



காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சிமெண்ட் அரைக்கும்
தொழிற்சாலையில் உள்ள பசுமை வளையம்



திருவள்ளூர் மாவட்டத்தில் அனல்மின் நிலையத்தில், சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கு பொருத்தப்பட்டுள்ள தகடுகள்



**22.05.2018** அன்று, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின்
முன்னிலையில் நடைபெற்ற பாலவாக்கம் கடற்கரை தூய்மை பணி